# இந்தியாவின் வருங்கால டிஸ்னி

ச்சுச்சு டி.வி.






சென்னை மாநகரத்தின் மையப்பகுதியில் இருக்கும் நன்கு பகட்டாக அலங்கரிக்கப்பட்ட அந்த அலுவலகத்தில் நுழையும்பொழுதே, பலர் வரிசையாக கணினிகளின் முன்பு உட்கார்ந்து கொண்டிருப்பதையும், அந்தக் கணினிகளின் பளபளக்கும் திரையில் வண்ணமயமான அசைவூட்டம் (அனிமேஷன்) ஓடிக் கொண்டிருப்பதையும், காணுகிறோம். நுழைவாயிலில், உலகெங்கும் உள்ள பல குழந்தைகளிடையே மிகப் பிரபலமாக இருக்கும்- 'ச்சுச்சு' 'ச்சாச்சா', 'ச்சிகு', 'ச்சிகா' – என்ற நான்கு கதாபாத்திரங்கள் பதாகைகளில் (கட் - அவுட்ஸ்) நம்மை வசீகரத்துடன் பார்க்கின்றன. மிகவும் அதிகமான பார்வையாளர்களைக் கொண்டிருக்கும் கல்விசார் 'யூ ட்யூப்' அலைவரிசையான 'ச்சுச்சு டி.வி.'யின் கதை இது. இதனை நிறுவியவர், எப்பொழுதும் கலகலப்புடனும், மிகுந்த உற்சாகத்துடனும் இருக்கும் இளைஞரான திரு. வினோத் சந்தர்.

**தொடக்க காலம்: பட்டீஸ் இன்ஃபோடெக் டாட் காம்** (Buddiesinfotech.com)
மெட்ராஸ் யூனிவர்ஸிடியில் பி.சி.ஏ. படித்த வினோத், தகவல் தொழில்நுட்பம் தொடர்புடைய தொழில் தொடங்க ஆர்வமாக இருந்தார். 100 சதுர அடியே உள்ள ஒரு இடத்தில் குறு தகடு எழுதுதல் (சி.டி. ரைட்டிங்), ஊடு கதிர்(ஸ்கேனிங்), அசைவூட்டம் முதலிய சேவைகள் செய்யும் 'மேசைப் பதிப்பு' (DTP) மையம் ஒன்றை நான்கு நண்பர்களுடன் சேர்ந்து தொடங்கினார். 'பட்டீஸ் இன்ஃபோடெக்' என பொருத்தமாகப் பெயரிடப்பட்ட இது, பின்னர் ஒரு தகவல் தொடர்பு சேவை நிறுவனமாக மாறியது. அமெரிக்காவில் உள்ள நிறுவனங்கள் சிலவற்றிற்காக பல திட்டப்பணிகளை (projects) வெற்றிகரமாக செயல்படுத்தி 5 நட்சத்திர மதிப்பீட்டினை தொடர்ச்சியாகப் பெற்ற இவர்கள், மேலும் விரிவடைந்து பெரிய பரவெளி உள்ள இடத்திற்கு அலுவலகத்தை மாற்றினார்கள். ஊழியர்களின் எண்ணிக்கையும் 200ஐ எட்டியது. சில வருடங்கள் வெற்றிகரமாக செயல்பட்ட இந்தத் தொழில், 2010ஆம் ஆண்டில் தகவல் தொழில் நுட்ப சந்தையில் நிகழ்ந்த பொருளியல் சரிவு (Recession) காரணமாக மூடப்பட்டது. பட்டீஸ் இன்ஃபோடெக்கில் கிடைத்த அனுபவமே, வினோதிற்கு நம்பிக்கை எனும் தீயினை மூட்டி, 'ச்சுச்சு அலைவரிசை' தொடங்க வித்திட்டது.
'ச்சுச்சு டி.வி.' வளர்ந்த கதை - ஆக்க எதிர்பாடு பட்டீஸ் இன்ஃபோடெக் சிரமத்தில் இருந்த அதே சமயத்தில், அந்தக் குழு 'இசைக் காணொளிகளை' (music videos) 'யூ ட்யூப்' இல் மேலேற்றத் (upload) தொடங்கியது. 'ச்சு ச்சு' என்று செல்லமாக அழைக்கப்பட்ட தனது மகள் ஹர்ஷிதாவுடன் விளையாடுவதில் வினோதிற்கு மிகவும் மகிழ்வைத் தரும் ஒரு செயல். அவளுக்கென பிரத்தியேகமாகக் காணொளி ஒன்றினை உருவாக்கும் எண்ணம் அவர் மனதில் பல நாட்களாக இருந்து வந்தது. 2011ஆம் ஆண்டில் மிகவும் பிரபலமானதும், பலராலும் காணப்பட்டதுமான 'சார்லி பிட் மை ஃபிங்கர்' (Charlie bit my finger) என்னும் காணொளியால் ஈர்க்கப்பட்ட அவர், 'ச்சுச்சு' என்னும் கதாபாத்திரத்தை மையமாக வைத்து ஒரு நர்சரி ரைம் காணொளியைத் தயாரிக்க விரும்பினார். தனது மாமாவின் வீட்டில், மாமா மகன்கள்/மகள்கள் குரல் கொடுக்க, 'ச்சப்பி சீக்ஸ்' நர்ஸரி ரைம் காணொளியினை உருவாக்கி, அதனை 'யூ ட்யூப்' இல் மேலேற்றவும் செய்தார். இரண்டே வாரங்களில், 2 லட்சம் பேர் இந்தக் காணொளியைப் பார்த்தனர். 'ச்சப்பீ சீக்ஸ்' (chubby cheeks) இற்கு யூ ட்யூபின் அதிகாரபூர்வமான அங்கீகாரமும் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 'ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்' காணொளியினையும் தயாரித்தார் வினோத். இந்த இரண்டு காணொளியினால் மட்டுமே இந்த அலைவரிசைக்கு 5000 ற்கும் மேற்பட்டவர்கள் சந்தாதாரர்கள் ஆயினர்.

இவர்களைப் பாராட்டிய யூ ட்யூப் நிறுவனம், இன்னும் பல காணொளிகளைத் தயாரிக்க ஊக்கம் அளித்தது. அசைவூட்டத்தில் அவருக்கு இருந்த பின்னணி, பாரம்பரியமாக இவருக்குள் இருந்த இசை ரசனை, தனது மகளுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற ஆவல், புதிய தொழில் தொடங்க உந்துதல், நண்பர்களின் ஆதரவு, இவருடைய படைப்பாற்றல் மற்றும் தன்னம்பிக்கை, இவையெல்லாம் சேர்ந்து, இவரது புதிய முயற்சி கண்டிப்பாக பெரும் வெற்றி அடையும் என்று பறை சாற்றின.

2013 ஆம் ஆண்டு, பி.என்.கிருஷ்ணன், அஜித் டோகோ, சுரேஷ் பூபதி, சுப்ரமணியன் ஆகியோருடன் கூட்டு சேர்ந்து 'ச்சுச்சு டி.வி.' நிறுவனத்தைத் தொடங்கினார் வினோத். பின்னோக்குப் பார்வை என்ற ஒன்று இல்லாமல், முன்னேறியது 'ச்சுச்சு டி.வி.'

**'ச்சுச்சு டி.வி.' யின் ஏறுமுகம்:**
சிறு குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், அவர்கள் மீண்டும் மீண்டும் இவர்களது அலைவரிசைக்கு வரவழைக்கும் வகையிலும் காணொளி தயாரிப்பதற்கு, மூளையை நன்கு கசக்கிப் பிழிய வேண்டும். நிறைய படைப்பாற்றலும் இதற்குத் தேவை. எனவே, படைப்பாற்றல் மிக்கவரும், கவித்தன்மை உள்ளவருமாகிய திரு.கிருஷ்ணனை 'ச்சு ச்சு டி.வி.' யின் 'ஆக்க இயக்குனர்' (Creative Director) ஆக நியமித்தார் வினோத்.

உலகெங்கிலுமுள்ள பல குழந்தைகளின் கவனத்தையும் கவர வேண்டும் என்றால், வித்தியாசமாக ஏதேனும் செய்ய வேண்டும் என்று மிக விரைவிலேயே அவர்கள் உணர்ந்தார்கள். அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுதே, பெரும்பாலும் அனைத்து நர்ஸரி ரைம்களும், சோகமான முடிவு கொண்டவை என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். "பழைய நர்ஸரி ரைம்கள், சரித்திர சம்பவங்களை சற்றே கேலியுடனும் கிண்டலுடனும் அணுகுகின்றன. பிஞ்சு மனங்களுக்கு இது உகந்ததல்ல", என்கிறார் கிருஷ்ணன்.
நேர்மறையான எண்ணங்களையும், வாழ்க்கை பற்றிய சிறந்த மதிப்பான பார்வையையும் சிறார்களுக்கு வழங்கும் முகமாக நர்ஸரி ரைம்களின் 'முடிவை' மாற்ற இருவரும் முடிவு செய்தனர். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எங்கும் மிகப் பிரபலமாக உள்ள, 'ஜாக் அண்ட் ஜில்' – இரண்டாம் பதிப்பு (Jack and Jill-ver 2.0). இரண்டாவது செய்யுட்பகுதியில், இயற்கைக் காட்சிகளின் அசைவூட்டலின் பின்னணியில், கிருஷ்ணன் இந்த வரிகளை சேர்த்தார்:
"பாதை தெரியும் மனோதிடம் இருந்தால்,
இறுதிவரை நடக்க வேண்டும் நீங்கள்,
முயற்சி செய்யுங்கள் தலை நிமிர்ந்து,
வெற்றி வாகை வரும் பறந்து''.
"Where there is a will there is a way
You gotto walk all the way
Try and try with your head high
You will succeed faster"

இந்த 2- நிமிட காணொளி உலகெங்குமுள்ள பார்வையாளர்களை அசத்தியது. விளைவு 'ச்சுச்சு டி.வி.' அடுத்த நிலைக்குச் சென்றது; பார்வையாளர்களும், சந்தாதாரர்களும் குவிந்தனர். இளம்பெற்றோர்கள், இந்தக் காணொளிகள், தமது குழந்தைகளை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு வாழ்வியலையும் கற்றுக் கொடுப்பதை உணர்ந்தார்கள். தங்கள் பின்னூட்டல்களையும், கருத்துகளையும், அலைவரிசைக்குத் தந்து மிகவும் ஆதரவு அளித்தார்கள். சக்தி மிக்க இசை,





உயிரோட்டமான அசைவூட்டம், இந்தமான வண்ணங்கள், நேர்மறைச் செய்திகள்- இவற்றை விட ஒரு குழந்தையின் மனத் திருப்திக்கு வேறு என்ன கூர்மையான ஆய்வுக்குப் பின்னர், நிறைய உள்ளடக்கமும், பலவித வண்ணங்களும் இருந்தால் காணொளிகள் தனிதன்மை வாய்ந்ததாக இருக்கும் என அறிந்து, இதையே தமது தாரக மந்திரமாக்கினார்கள். கருவை அனைவரையும் கவரும் வண்ணம் எளிதாக்கி, வண்ணங்களைக் கூட்டி, கல்வி சார்புக்கு முக்கியத்துவம் அளித்து, எளிதில் நினைவில் நிற்குமாறு செய்தார்கள். “வித்தியாசமாகச் செய்யப்படும் பொருள், வெற்றியினைப் பெற்றுத் தரும்”, என்கிறார் வினோத்.

எப்பொழுதும் மென்மையான பாதையல்ல: பல ‘துவக்கத் தொழில்கள்’ (start-ups) போலவே ‘ச்சுச்சு டி.வி.’ யின் குழுவும், அடுத்த கட்டத்திற்குத் தொழிலை எடுத்துச் செல்வதில், பல சவால்களை சந்திக்கிறார்கள். போட்டி நிறையவே இருப்பதால், வேகம், புதுமை, புதிய தொழில் நுட்பத்தைத் தழுவுவது, தரவு ஆய்வு, மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு, போன்ற பல அம்சங்கள், தொடர்ந்து தொழிலில் வெற்றி பெறத் தேவைப்படுகின்றன.

இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் குழு, வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையுடன் இயங்குகிறது.
தொழில் முனையும் இளைஞர்களுக்கு வினோத் கூறும் செய்தி இதுவே - ‘முயற்சி திருவினையாக்கும்’ என்று பொறுமையுடன் நம்புங்கள், எந்தத் தொழிலில் கள அறிவு இருந்து தலைமை ஏற்று நடத்த முடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ, அந்தத் தொழிலைத் தேர்ந்தெடுங்கள்.

**ச்சுச்சு டி.வி. இன்று:**
கடந்த 6 வருடங்களில் உலகில் நல்லதொரு பாதிப்பினை ஏற்படுத்தி, வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் கற்று வளரும் முறையில் ஒரு கருத்தியல் மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது ‘ச்சுச்சு டி.வி.’ காணொளிகளை ‘யூ ட்யூப்’ இல் மேலேற்றுவதில் தொடங்கி தம்மைப் பல வகைகளிலும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள் இவர்கள். ‘கோரிக்கைக்கேற்ற காணொளி’ (Video on Demand) சேவை செய்யும் நிறுவனங்களான அமேசான் ப்ரைம், ரோகோ, நெட்ஃப்ளிக்ஸ், ஆப்பிள் டி.வி’ போன்றவைகளுடன் ஒப்பு அளித்தல் செய்திருக்கிறார்கள்.

பலதரப்பட்டவர்களும் காணும் முகமாக பல அலைவரிசைகளைத் தொடங்கியிருக்கிறார்கள்.- கதைகளுக்காக ‘ச்சுச்சு டி.வி. சர்ப்ரைஸ்’, அஞ்சல் செய்யும் காணொளிகளுக்காக ‘ச்சுச்சு டி.வி. லைட்’, தரவிரக்கம் வடிவூட்டம் கொண்ட ‘ச்சுச்சு டி.வி. ப்ரோ’. மேலும், ஸ்பானிஷ், ஃப்ரென்ச், ப்ரெஸிலியன், போர்ச்சுகீஸ் போன்ற வேற்று மொழிகளிலும் தம்மை விரிவுபடுத்தி, இந்த நாடுகளில் லட்சக்கணக்கான சந்தாதாரர்களையும் பெற்றிருக்கிறார்கள் இவர்கள். சென்னையில் 200 ஊழியர்களை மட்டுமே வைத்துக் கொண்டு பணிகளைச் செய்வதை கருத்தில் கொண்டால், இது ஒரு மிகப்பெரிய சாதனை.
ரைம்ஸ் ஐத் தாண்டி தமது உள்ளடக்கத்தை, கிரியைகள் (activities) விளையாட்டுகள், கற்பதற்கான ஆலோசனைகள் என்று மேம்படுத்துவதில் ஈடுபடுகிறார்கள் இப்பொழுது. தமது வாணிகச்சரக்குகளாகிய ‘ச்சுச்சு பொம்மைகள்’, ஆடைகள், புத்தகங்கள் போன்றவைகளை விற்க, வால் மார்ட், டார்கெட் போன்ற பேரங்காடிகளுடன் ஒப்பு அளித்தல் செய்திருக்கிறார்கள். ‘கருத்துப் பூங்கா’ (theme park), ‘ச்சுச்சு தொடர்கள்’, குறும்படங்கள், ‘ச்சுச்சு கேளிக்கை தொகுதி’ (fun zone) முதலியவை உள்ளடக்கிய ‘ச்சுச்சு வர்ல்ட்’ எனும் குழந்தைகளுக்கான சூழல் அமைப்பை உருவாக்குவது இவர்களது குறிக்கோள்.
‘ச்சுச்சு டி.வி.’ தொடங்கிய அனைத்து அலைவரிசைகளும் யூ ட்யூப் விருதுகளை வாங்கியிருக்கிறது. முக்கிய அலைவரிசையான ‘ச்சுச்சு டி.வி.’ யூ ட்யூபின் ப்ளாட்டினம் விருதினை வாங்கியிருக்கிறது. மொத்தம் 3.8 கோடி சந்தாதாரர்கள் இருக்கும் இந்த அலைவரிசைகள், 280 கோடி முறைகள் பார்க்கப்பட்டிருக்கின்றன. ஆசியாவிலேயே 1 கோடி சந்தாதாரர்கள் கணக்கைத் தாண்டிய 5 ஆவது அலைவரிசை, ‘ச்சுச்சு டி.வி’ ஆகும். உலகிலேயே அதிக சந்தாதாரர்கள் உள்ள 10 அலைவரிசைகளுள் இதுவும் ஒன்று. வெறும் 120 காணொளிகள் மட்டுமே இருந்தும், 1 கோடி சந்தாதாரர்களை அடைந்த அலைவரிசை இது என்பது குறிப்பிடத் தக்கது.

நம்மிடையே இருந்து, உலக நாடுகளில் ஒரு நல்ல பாதிப்பை உண்டாக்கிய எளிமையான, அடக்கமான, அதே சமயத்தில் உற்சாகம் நிரம்பப் பெற்ற இந்த குழுவிற்கு பாராட்டுக்கள். வருங்காலத்தில் ‘இந்தியாவின் டிஸ்னி’ யாக இவர்கள் ஆவதற்கு நமது வாழ்த்துக்கள்.

ராஜேந்திர குமார்